1983, பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தற்போது கிராம அங்காடியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு அங்காடியாக இருந்தாலும் சரி, அது பஞ்சாயத்து கட்டடத்திலே இயங்குகிறது. சீவாடி கிராமத்தில் உள்ள பஞ்சாயத்துக்குச் சொந்தமான இடத்தில் அந்த அங்காடி இயங்குவதால், தாழ்த்தப் பட்ட மக்கள், அந்தப் பகுதிக்குச் சென்று பொருள்கள் வாங்க முடியாத அளவிற்கு சிரமம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறையைப் போக்க அதனுடைய கிளை ஒன்றை அந்தப் பகுதியில் அமைக்க அரசு முயற்சிக்கும்.

சென்னை பிராட்வேயிலுள்ள வெளியூர் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.

*வினா எண். 196—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வே வெளியூர் பேருந்து நிலையத்தை வேறிடத்திற்கு மாற்றி விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆம். சென்னை பிராட்வேயில் உள்ள வெளியூர் பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றி, தற்போதுள்ள இடத்தில் நகர் பேருந்து நிலையம் மற்றும் கடைவீதியாக மாற்றும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையம் வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பு உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த பேருந்து நிலையம் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே மாற்றுகின்ற வரையில் அதை நல்ல முறையில் கவனிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி கவனிக்கலாம்.

பெரியகுளம் நகரில் அரசு ஊழியர்களுக்கென வீடு கட்டும் திட்டம்.

*வினா எண். 197—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் நகரில் அரசு ஊழியர்களுக்கென வீடு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?